திரு. மு. சண்முகம்: கிராமங்களுக்கு பாதுகாப்புக் குடி தண்ணீர் திட்டம் வழங்குவதற்கு 'யூனிஸெப்'-ம், மத்திய அரசாங்கமும் உதவி அளிக்கின்றன என்று சொல்லுவது போல் நகரங்களுக்கும் அத்தகைய உதவி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அதற்குத் தனி கேள்வி வேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் பல கிராமங்களில் சரிவர நிறைவேற்றப்படாத காரணத்தினால், அங்கே தெருக்களிலெல்லாம் சகதியாகிற வகையில் வடிகால்கள் இல்லாமல் இருக்கிறது. அரசாங்கம் அப்படிப்பட்ட பகுதிகளை உடனடியாக எடுத்துக்கொண்டு, அங்கே அந்த திட்டத்தை நிறைவேற்ற முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனை கருத்தில் வைக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுண்டர்: கடல் நீரை குடி நீராக மாற்ற முடியும் என்று அண்மையில் அயல்நாடு சென்று திரும்பிய நமது தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அதுபற்றி என்னுடைய சக அமைச்சர் தொழில் அமைச்சர் அவர்கள் கூறுவார்கள்.

MR. SPEAKER: Questions 222, 223 and 224 may be taken up together. Questions 227 and 228 also relate to the same subject.

குடிநீர் திட்டம் (திருவண்ணாமலை)

*222 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன், திரு. ப. உ. சண்முகம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகருக்குத் தேவையான குடிநீரைச் சாத்தனூர் அணையிலிருந்து கொண்டுவரும் திட்டம் எப்போது அனுமதிக்கப்பட்டது?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(உ) அது எப்போது நிறைவேற்றப்படும்?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம்: (அ) திருவண்ணாமலை நகருக்குத் தேவையான குடி நீர் பொன்னியாற்றிலிருந்து ஒலகலப்பாடிக்கு அருகிலுள்ள அணைக்கட்டிலிருந்து கொண்டுவரப்படும். இத்திட்டம் 1963-ம் வருஷம் ஜூன் மாதத்தில் அனுமதிக்கப்பட்டது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 47.73 லட்சம் வருடாந்திரப் பேணுதல் மதிப்பீடு ரூபாய் 94,000.

(உ) இத்திட்டம் 1963-64-ம் (எப்ரல் 1963—மார்ச் 1964) வருடத்திற்குள் நிறைவேற்றுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

18th November 1963]

(a) The drinking water for Tiruvannamalai will be taken from the river Ponniyar Anicut near Olagalapadi. This scheme was sanctioned in June 1963.

(b) The estimated cost of the scheme is Rs. 47.73 lakhs to install and Rs. 94,000 to maintain annually.

(c) The scheme will be taken for execution during 1963-64.

***223 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை குடி தண்ணீர் சப்ளைக்கான விரிவான திட்டம் ஒன்றை சர்க்கார் அனுமதித்துள்ளனர் என்பது உண்மையா?

(இ) இதுபற்றி மேற்படியூரில் உள்ள பொது ஸ்தாபனங்கள் விண்ணப்பம் ஏதேனும் செய்துள்ளனவா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆமாம்.

(இ) இல்லை.

***224 கேள்வி—திரு. கோ. சி. மணி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகராட்சிக் குடிநீர் திட்டத்துக்கென அரசாங்கம் கடனுதவி அளித்திருப்பது உண்மையா?

(இ) திருவண்ணாமலை நகராட்சி கடனுதவி கோரி மனுவை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இதுவரை எந்தக் கடனும் வழங்கவில்லை.

(இ) கடன் மனு எதுவும் வரவில்லை.

திரு. ப. உ. சண்முகம்: ஜூன் மாதத்தில் இந்தத் திட்டம் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். திருவண்ணாமலை இடைத் தேர்தலை ஒட்டி, இந்தத் திட்டத்தை அவசரம் அவசரமாக அனுமதித்ததற்கு காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஜனங்கள் தண்ணீருக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததுதான் காரணம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: எற்கெனவே பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நேரத்தில் திருவண்ணாமலைத் திட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டதற்கு என்ன காரணம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: திருவண்ணாமலைப் பகுதியில் எப்போதுமே குடி தண்ணீர் கஷ்டம் உண்டு. அதை உணர்ந்துதான் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.